ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1555/9 - 2008 ජූනි 25 වැනි බදාදා - 2008.06.25
*1555/9 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2006.*

**2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்**

*2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடனும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய மேற்கூறப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2008, மே 29.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் ஒழுங்குவிதி என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் 2008, யூன் 1 ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

*2.* 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, வாடிக்கையாளர் ஒருவரின் வேண்டுகோளின்பேரில் இலத்திரனியல் நிதிக் கைமாற்றுதல் ஒவ்வொன்றையும் அத்தகைய கைமாற்றுதலின் தொகை ஒரு மில்லியன் ரூபாவை (ரூபா 1,000,000) அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுகின்றவிடத்து, நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

*3.* 2006, மாச்சு 23 ஆந் திகதிய 1437/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

*07- 190/1*

ச.வ.பீ. 3/2006.

## 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்

6 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு மேற்கூறப்பட்ட சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் 2008, யூன் 1 ஆந் திகதி தொடக்கம் பணத்தில் ஒரு மில்லியன் ரூபாவை (ரூபா 1,000,000) அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையை விஞ்சிய ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் தீர்மானிக்கின்றேன்.

2006, மாச்சு 23 ஆந் திகதிய 1437/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2008, மே 29.

07- 190/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.